සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

**22 T I**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும்.
* **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
* **பகுதி II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
* **பகுதி III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
* **பகுதி I, பகுதி II, பகுதி III** ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| | **வினா இல** | **புள்ளிகள்** |
|---|---|---|
| பகுதி **I** | **1 - 40** | |
| பகுதி **II** | **1** | |
| | **2** | |
| பகுதி **III** | **3** | |
| | **4** | |
| | **5** | |
| | **6** | |
| **மொத்தம்** | | |

| | **கையொப்பம்** | **குறியீட்டு எண்** |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சகர் | | |
| 2 ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணித பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |






## பகுதி I

* ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவுசெய்து, அதற்குரிய **இலக்கத்தினை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**1.** பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் (GPS) தொழிற்பாடுகளுக்காக விண்வெளியில் எவ்வளவு சராசரி உயரத்தில் செய்மதிகள் நிறுத்தப்பட்டுள்ளன?

(1) 20 200 km (2) 22 200 km (3) 24 200 km
(4) 26 200 km (5) 28 200 km (......)

**2.** இலங்கையின் 1: 50 000 இடவிளக்கப் படத்தில் புகையிரத சுரங்கப் பாதையொன்றினை எடுத்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் குறியீடு யாது?

(1)  (2) 
(3)  (4) 
(5)  (......)




Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

3. இடவிளக்கப் படங்கள் பிரதானமாக அமைக்கப்படுவது,
   (1) பௌதிக பண்பாட்டு அம்சங்களை வெளிக்காட்டுவதற்காகும்.
   (2) வெவ்வேறு இடங்களுக்கு இடையிலான தூரத்தை அளவிடுவதற்காகும்.
   (3) தேசிய ஆள்கூறுகளின் உதவியுடன் அமைவிடத்தினை இனங்காண்பதற்காகும்.
   (4) பண்பாட்டு அம்சங்களை மாத்திரம் உள்ளடக்குவதற்காகும்.
   (5) பௌதிக அம்சங்களை மாத்திரம் உள்ளடக்குவதற்காகும் (......)

4. படங்களின் இரண்டு பிரதான வகைகளை எடுத்துக் காட்டும் தெரிவு யாது?
   (1) இடகணியப் படங்கள் மற்றும் புள்ளிப் படங்கள்
   (2) இடவிளக்கப் படங்கள் மற்றும் கருப்பொருட் படங்கள்
   (3) இடவிளக்கப் படங்கள் மற்றும் சமகணியப் படங்கள்
   (4) சம கணியப் படங்கள் மற்றும் இடகணியப் படங்கள்
   (5) இடவிளக்கப் படங்கள் மற்றும் புள்ளிப் படங்கள் (......)

5. படத்தில் 4 cm × 4 cm சதுரமொன்றினால் எடுத்துக்காட்டப்படும் ஒரு சதுரக் கிலோ மீற்றர் ($1km^2$) நிலப் பகுதியைக் காட்டும் படமொன்றின் சரியான அளவுத்திட்டம் யாது?
   (1) 1: 5 000 (2) 1: 10 000 (3) 1: 25 000 (4) 1: 50 000 (5) 1: 100 000 (......)

6. கீழே தரப்பட்டுள்ள (A) மற்றும் (B) வரைபடங்களில் எடுத்துக்காட்டப்படும் X - Y கோடுகள் நெடுகிலும் காணப்படும் இரண்டு வகையான சாய்வுகளும் யாவை?
   (1) (A) குவிவுச் சாய்வு, (B) மென் சாய்வு
   (2) (A) குழிவுச் சாய்வு, (B) குவிவுச் சாய்வு
   (3) (A) குவிவுச் சாய்வு, (B) குழிவுச் சாய்வு
   (4) (A) மென் சாய்வு, (B) குழிவுச் சாய்வு
   (5) (A) குத்துச் சாய்வு, (B) குவிவுச் சாய்வு



(A) (B)

(......)

7. தொலையுணர்வுத் தரவுகளைச் சேகரிப்பதற்கு விண்வெளி மேடையாகப் பயன்படுத்தப்படும் மூன்று வகையான விண்கலங்களாவன,
   (1) விண்வெளி ஓடங்கள், புவிநிலைச் சுற்றுச் செய்மதிகள் மற்றும் தாழ் உயரச் செய்மதிகள்
   (2) விண்வெளி ஓடங்கள், விண்வெளி நிலையங்கள் மற்றும் புவிநிலைச் சுற்றுச் செய்மதிகள்
   (3) விண்வெளி நிலையங்கள், புவிநிலைச் சுற்றுச் செய்மதிகள் மற்றும் உயர் மட்டச் செய்மதிகள்
   (4) விண்வெளி ஓடங்கள், விண்வெளி நிலையங்கள் மற்றும் தாழ் உயரச் செய்மதிகள்
   (5) புவிநிலைச் சுற்றுச் செய்மதிகள், விண்வெளி நிலையங்கள் மற்றும் உயர் மட்டச் செய்மதிகள் (......)

8. இலங்கையின் மொத்தக் குடித்தொகையில் ஏற்படும் வருடாந்த மாற்றங்களை எடுத்துக்காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான வரைபு முறை,
   (1) பல்பார் வரைபு (2) பல் கோட்டு வரைபு (3) கூம்பக வரைபு
   (4) வட்ட வரைபு (5) எளியகோட்டு வரைபு (......)


9. இலங்கையின் குறிப்பிட்ட மாவட்டமொன்றில் காணப்படும் நீர்ப்பாசனக் குளங்களின் எண்ணிக்கையை எடுத்துக்காட்டும் தரவு வகை,
   (1) தொடர்ச்சியான தரவு (2) பண்புத் தரவு (3) முதனிலைத் தரவு
   (4) பின்னகத் தரவு (5) இடம்சாராத் தரவு (......)

10. இடகணியப் படமொன்றினால் எடுத்துக்காட்டக் கூடிய தரவினைக் கொண்டிருக்கும் தெரிவு,
   (1) பல வருடங்களுக்குரிய மாதாந்த மழைவீழ்ச்சி
   (2) தரப்பட்டுள்ள வருடமொன்றில் வயது மற்றும் பால் பிரிவுக்கான குடித்தொகை
   (3) தரப்பட்டுள்ள வருடமொன்றில் மாவட்டங்களின் குடித்தொகை அடர்த்தி
   (4) பல வருடங்களுக்குரிய சராசரி நெல் விளைச்சல்
   (5) தரப்பட்டுள்ள வருடமொன்றில் நாடொன்றின் இறக்குமதிக் கொள்ளளவு (......)

11. புவியின் கற்கோளத் தொகுதியில் அமைந்திருப்பது,
   (1) இடையோடும் சமுத்திர ஓடுமாகும். (2) இடையோடும் கண்ட ஓடுமாகும்.
   (3) ஓடும் திண்ம வலயமுமாகும். (4) திண்ம வலயமும் பாகுக் கோளமுமாகும்.
   (5) ஓடும் மேல் இடையோடுமாகும். (......)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
[பக். 3 ஐப் பார்க்க

**12.** அருகிலுள்ள இலங்கைப் படத்தில் ஈரநிலங்கள் நான்கின் அமைவிடங்கள் A, B, C மற்றும் D எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. சரியாகப் பெயரிடப்பட்டுள்ள விடையினைத் தெரிவுசெய்க.




(1) A - வங்காலை B - ஆனைவிழுந்தான்
C - மாதுகங்கை D - புந்தல

(2) A - ஆனைவிழுந்தான் B - வங்காலை
C - பொல்கொட D - குமண

(3) A - ஆனைவிழுந்தான் B - வில்பத்து
C - மாதுகங்கை D - குமண


(4) A - சுண்டிக்குளம் B - ஆனைவிழுந்தான்
C - புந்தல D - குமண

(5) A - வங்காலை B - மாதுகங்கை
C - ஆனைவிழுந்தான் D - புந்தல (......)

**13.** தாவரத்தினூடாக வளிமண்டலத்திற்கு நீரினைப் பரிமாற்றம் செய்யும் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
(1) ஒடுங்கல் (2) ஆவியுயிர்ப்பு (3) படிவு வீழ்ச்சி
(4) ஊடுபரவல் (5) கழிவு நீரோட்டம் (......)

**14.** இலங்கையில் இரண்டாவது பெரிய நீரேந்து பகுதியைக் கொண்டிருக்கும் ஆறு எது?
(1) கலா ஓயா (2) களு கங்கை (3) களனி கங்கை
(4) வளவை கங்கை (5) மல்வத்து ஓயா (......)

**15.** அருகிலுள்ள படமொன்றில் முறையே X மற்றும் Y இனால் குறித்துக்காட்டப்படும் இரண்டு உயிரினக்கூட்டங்களைப் பின்வரும் தெரிவுகளில் எது எடுத்துக்காட்டுகின்றது.




(1) மழைக்காடுகள் மற்றும் புல்நிலங்கள்
(2) புல்நிலங்கள் மற்றும் பாலைவனங்கள்
(3) பாலைவனங்கள் மற்றும் அயன மழைக்காடுகள்
(4) சவன்னா மற்றும் அயன மழைக்காடுகள்
(5) சவன்னா மற்றும் புல்நிலங்கள் (......)

**16.** எந்தப் பிரதேசத்தில் சூறாவளிகள் 'ஹரிக்கேன்கள்' என அழைக்கப்படுகின்றன?
(1) வடக்கு அத்திலாந்திக் சமுத்திரத்திலாகும். (2) வடக்கு இந்து சமுத்திரத்திலாகும்.
(3) வடக்குப் பசிபிக் சமுத்திரத்திலாகும் (4) பிலிப்பைன்ஸ்சுக்கு தெற்கிலாகும்.
(5) கரீபியன் கடலிலாகும். (......)

**17.** இலங்கையில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் (NBRO) விஞ்ஞானப் பிரிவுகள் இரண்டினை சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) மானிடக் குடியிருப்பு மற்றும் கரையோர முகாமைத்துவம்
(2) சூழலியல் ஆய்வுகள் மற்றும் புவி - தொழில்நுட்பம்
(3) புவி - தொழில்நுட்பம் மற்றும் அதிவேக வீதிக்கட்டுமானம்
(4) மானிடக் குடியிருப்பு மற்றும் காலநிலை மாற்றம்
(5) செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் மண் பாதுகாப்பு (......)


**18.** இலங்கையில் மக்னரைற் கனியம் காணப்படும் அமைவிடங்களில் இரண்டு,
(1) புல்மோட்டை மற்றும் கைக்காவல ஆகும். (2) விலகெதர மற்றும் சேருவில ஆகும்.
(3) தப்போவ மற்றும் ஆண்டிகம ஆகும். (4) தியத்தலாவ மற்றும் குதிரைமலை ஆகும்.
(5) தும்பறை மற்றும் போகல ஆகும். (......)


**19.** வளிமண்டல இடர்கள் மூன்றினைக் கொண்டிருக்கும் தெரிவு,
(1) மின்னல், வரட்சிகள், மற்றும் எரிமலைகள்
(2) புவிநடுக்கங்கள், வெள்ளப்பெருக்குகள் மற்றும் எரிமலைகள்
(3) வெள்ளப்பெருக்குகள், சுனாமி மற்றும் புவிநடுக்கங்கள்
(4) சூறாவளிகள், வெள்ளப் பெருக்குகள் மற்றும் மின்னல்
(5) பனிப்பாறைச் சரிவுகள், சூறைப்புயல் மற்றும் சுனாமி (......)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**20.** காடழித்தலினால் நேரடியாக ஏற்படும் இரண்டு பாதகமான நேரடித் தாக்கங்களை கொண்டுள்ள தெரிவு எது?
(1) மண் அரித்தலில் அதிகரிப்பு மற்றும் தொற்று நோய்களின் அதிகரிப்பு
(2) நீர் வழிகளில் மணற்றடை ஏற்படல் மற்றும் சூறாவளி அனர்த்தங்களின் அதிகரிப்பு
(3) மண் அரித்தலில் அதிகரிப்பு மற்றும் வனவிலங்கு வாழிடங்கள் இழப்பு
(4) நீண்ட வரட்சி நிலைமைகள் மற்றும் நச்சு வாயுக்களின் வெளியேற்றம்
(5) வனவிலங்கு வாழிடங்களின் இழப்பு மற்றும் உள்நாட்டு நீரில் உவர் நீரின் ஊடுருவல் (......)

**21.** கீழேயுள்ள வரைபடங்களில் மடிப்புகளின் மூன்று அடிப்படை வகைகள் A, B, C என எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பின்வரும் தெரிவுகளில் எது அவற்றினைச் சரியாகப் பெயரிடுகிறது?


A


B


C

(1) A - உதைப்பு மடிப்பு B - சமச்சீர் மடிப்பு C - ஒற்றைச்சரிவு மடிப்பு
(2) A - உதைப்பு மடிப்பு B - மேலுதைப்பு மடிப்பு C - சமச்சாய்வு மடிப்பு
(3) A - ஒற்றைச்சரிவு மடிப்பு B - சமச்சாய்வு மடிப்பு C - மேலுதைப்பு மடிப்பு
(4) A - மேலுதைப்பு மடிப்பு B - சமச்சீரற்ற மடிப்பு C - உதைப்பு மடிப்பு
(5) A - ஒற்றைச்சரிவு மடிப்பு B - சமச்சீரற்ற மடிப்பு C - சமச்சீர் மடிப்பு (......)

**22.** சேதன அடையல் பாறைகளுக்கான உதாரணங்கள் இரண்டு,
(1) முற்றா நிலக்கரி மற்றும் உப்பு பாறைகள் (2) லிமொனைற் மற்றும் மாக்கல்
(3) பரல்கற்கள் மற்றும் நிலக்கரி (4) ஹெமரைற் மற்றும் ஜிப்சம்
(5) முற்றா நிலக்கரி மற்றும் நிலக்கரி (......)

**23.** நிலச்சரிவுகளை ஏற்படுத்தும் பௌதிகக் காரணி
(1) ஒழுங்கற்ற நிலப் பயன்பாடு (2) மழைவீழ்ச்சி செறிவு
(3) சாய்வான பகுதிகளில் கட்டுமானங்கள் (4) மலைப் பகுதிகளில் காடழிப்பு
(5) சட்டவிரோத சுரங்கமறுத்தல் (......)

**24.** இலங்கையில் ஈரப் பத்தனைப் புல்நிலங்கள் காணப்படும் அமைவிடம் ஒன்று,
(1) வெளிமடை (2) இறக்குவான (3) ஹோட்டன் சமவெளி
(4) நக்கிள்ஸ் (5) கன்னெலிய (......)

**25.** 'மோகோறோவிசிக் தொடர்ச்சியின்மை' மூலம் பிரித்துக் காட்டப்படும் புவியின் இரண்டு படைகளாவன,
(1) கண்ட ஓடு மற்றும் சமுத்திர ஓடு ஆகும்.
(2) வெளிக்கோளவகம் மற்றும் உட்கோளவகம் ஆகும்.
(3) மேல் இடையோடு மற்றும் கீழ் இடையோடு ஆகும்.
(4) இடையோடு மற்றும் கோளவகம் ஆகும்.
(5) ஓடு மற்றும் இடையோடு ஆகும். (......)

**26.** நாடொன்றின் குடித்தொகைப் பரம்பலைத் தீர்மானிக்கின்ற பௌதிகக் காரணிகளை மாத்திரம் காட்டும் தெரிவு யாது?
(1) கனிய வளங்கள், தரைத்தோற்றம், விவசாயம் மற்றும் காலநிலை
(2) காலநிலை, தரைத்தோற்றம், நீர்வளங்கள் மற்றும் விவசாயம்
(3) தரைத்தோற்றம், இயற்கைத் தாவரம், இடப்பெயர்வு மற்றும் மண்
(4) நீர் வளங்கள், மண், இயற்கைத் தாவரம் மற்றும் இடப்பெயர்வு
(5) காலநிலை, தரைத்தோற்றம், நீர்வளங்கள் மற்றும் இயற்கைத் தாவரம் (......)

**27.** 2012 இன் கணிப்பீட்டின்படி இலங்கையில் மிகக் குறைவான குடித்தொகை அடர்த்தியைக் கொண்ட நான்கு மாவட்டங்களும் யாவை?
(1) மன்னார், மொனராகலை, முல்லைத்தீவு, வவுனியா
(2) மன்னார், மொனராகலை, அனுராதபுரம், அம்பாறை
(3) மன்னார், முல்லைத்தீவு, பொலன்நறுவை, அனுராதபுரம்
(4) மொனராகலை, வவுனியா, மாத்தளை, பதுளை
(5) மன்னார், வவுனியா, திருகோணமலை, இரத்தினபுரி (......)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/ 

**28.** உலகின் குடித்தொகை அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகள் இரண்டினைக் காட்டும் தெரிவு,
(1) இடம்பெயர்வோர் எண்ணிக்கையில் அதிகரிப்பு மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி
(2) பிறப்புகளின் எண்ணிக்கையிலும் பார்க்க இறப்புக்களின் எண்ணிக்கை அதிகமாக இருத்தல்
(3) பிறப்புக்களின் எண்ணிக்கை நிலையாகக் காணப்படல் மற்றும் இடம்பெயர்வோர் எண்ணிக்கையில் அதிகரிப்பு
(4) இறப்புகளின் எண்ணிக்கையைவிட பிறப்புகளின் எண்ணிக்கை உயர்வாக இருத்தல்
(5) பிறப்புக்களின் எண்ணிக்கையும் இறப்புக்களின் எண்ணிக்கையும் சமமாகக் காணப்படுதல் (……)

**29.** தொழிலாளர் வெளி இடப்பெயர்வு காரணமாக இலங்கை போன்ற ஒரு நாட்டிற்குக் கிடைக்கும் நன்மையாவது
(1) பாரிய அளவுத்திட்டக் கைத்தொழில்களில் பணம் முதலீடு செய்யப்படும் போக்கு
(2) மிகப்பொருத்தமான தொழில்நுட்பங்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படல்
(3) நாட்டின் தனிநபர் வருமானத்தில் முனைப்பான அதிகரிப்பு
(4) குடும்பத்திலும் குடும்பங்களுக்கு இடையிலும் காணப்படும் உறவுமுறைகள் வலுவடைதல்
(5) வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தல் (……)

**30.** பசுமைப் புரட்சியினால் ஏற்பட்டுள்ள சாதகமல்லாத ஒரு சூழலியல் விளைவு,
(1) விவசாயிகளிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தோற்றம் பெற்றமை
(2) வறுமையான விவசாயிகள் கடன் சுமையில் காணப்பட்டமை
(3) விவசாய உள்ளீடுகளின் செலவு அதிகரித்தமை
(4) உணவாகக் கொள்ளக்கூடிய இலைகள் நிறைந்த தாவர இனங்கள் அழிவடைந்தமை
(5) பல்தேசியக் கம்பனிகளின் பலம் அதிகரித்தமை (……)

**31.** சேதன விவசாயத்தினால் ஏற்படும் இரண்டு நன்மைகளாவன,
(1) மண் தரம் பாதுகாக்கப்படல் மற்றும் மக்களின் சிறந்த சுகாதாரம் உறுதிப்படுத்தப்படல்
(2) நீரின் தரத்தினைப் பாதுகாத்தல் மற்றும் நீரின் கழுவுநீரோட்டம் அதிகரித்தல்
(3) உற்பத்திகளுக்கான சந்தை விலை குறைதல் மற்றும் சூழலியல் பாதுகாப்பு
(4) செயற்கை முறைகளினால் மண்வளமாக்கப்படல் மற்றும் உயிர்ப் பல்வகைமையைப் பேணுதல்
(5) விளைச்சலில் விரைவான அதிகரிப்பு மற்றும் உயர் வருமானத்தை உருவாக்குதல் (……)

**32.** அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நகராக்கத்துடன் இணைந்து காணப்படும் மூன்று பண்புகளாவன,
(1) போக்குவரத்து நெரிசல், வீடுகளின் பற்றாக்குறை, குறைந்த குடித்தெகை அடர்த்தி
(2) போக்குவரத்து நெரிசல், வீடுகளின் பற்றாக்குறை மற்றும் விவசாய நிலப்பயன்பாட்டின் அதிகரிப்பு
(3) திண்மக் கழிவு அதிகரிப்பு, குற்றங்களின் அதிகரிப்பு, தொற்று நோய்கள் குறைந்த மட்டத்தில் காணப்படல்
(4) போக்குவரத்து நெரிசல், சேரிகள் மற்றும் தரம் குறைந்த வாழிடப் பகுதிகளின் வளர்ச்சி மற்றும் குற்றங்களின் அதிகரிப்பு
(5) வீடுகளின் பற்றாக்குறை, வளி மாசடைதல் மற்றும் விவசாய நிலப்பயன்பாட்டில் அதிகரிப்பு (……)

**33.** இலங்கையில் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படும் இரண்டு பிரதான மாவட்டங்களை எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) மொனராகலை மற்றும் பொலன்னறுவை
(2) மொனராகலை மற்றும் அம்பாறை
(3) திருகோணமலை மற்றும் கிளிநொச்சி
(4) ஹம்பாந்தோட்டை மற்றும் அம்பாறை
(5) ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை (……)

**34.** தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்கள அறிக்கையின்படி, இலங்கையில் 2012 ஆம் ஆண்டு நகரக் குடித்தொகையில் மிக உயர்ந்தளவு சத வீதத்தைக் கொண்ட இரண்டாவது மாவட்டம்
(1) மாத்தளை (2) யாழ்ப்பாணம் (3) மட்டக்களப்பு
(4) மாத்தறை (5) களுத்துறை (……)

**35.** உலகில் பெற்றோலியத்தினை ஏற்றுமதி செய்யும் மூன்று பிரதான நாடுகளாவன
(1) ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நைஜீரியா, வெனிசுலா
(2) ரஷியா, லிபியா, உக்ரெய்ன்
(3) ரஷியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நைஜீரியா
(4) நைஜீரியா, ரஷியா, லிபியா
(5) ரஷியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சீனா (……)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**36.** ஐக்கிய நாடுகளின் படி உலகின் மிகக் குறைந்தளவான நகராக்கத்தினைக் கொண்ட இரண்டு நாடுகளாவன,
(1) மாலாவி மற்றும் உருகுவே
(2) இலங்கை மற்றும் கட்டார்
(3) நேபாளம் மற்றும் வேர்ஜின் தீவு
(4) புருண்டி மற்றும் பப்புவா நியூ கினியா
(5) சென். லூசியா மற்றும் குவைற் (……)

**37.** தற்பொழுது, உற்பத்திக் கைத்தொழில்களின் அமைவிடத்தினை நிர்ணயிக்கும் மரபுவழியல்லாத ஒரு காரணி,
(1) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
(2) சக்தி வளங்கள்
(1) மூலப் பொருள்
(4) தொழிலாளர் நிரம்பல்
(5) சந்தை (……)

**38.** பின்வரும் தெரிவுகளில் எது, நகரப் படிமுறையை ஏறுவரிசை ஒழுங்கில் எடுத்துக்காட்டுகின்றது?
(1) நகரம், பட்டினம், தலைநகரம், பெருநகரம், நகரக்கூட்டு
(2) பட்டினம், நகரம், தலைநகரம், பெருநகரம், நகரக்கூட்டு
(3) நகரம், பெருநகரம், நகரக்கூட்டு, பட்டினம், தலைநகரம்
(4) நகரக்கூட்டு, பெருநகரம், தலைநகரம், பட்டினம், நகரம்
(5) பட்டினம், நகரம், தலைநகரம், நகரக்கூட்டு, பெருநகரம் (……)

**39.** இலங்கையின் சுற்றுலா சபையினால் பெயரிடப்பட்ட புராதன நகரங்களின் சுற்றுலா வலயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நான்கு நகரங்களாவன,
(1) குருநாகல், பொலன்னறுவை, யாப்பகூவ மற்றும் மாத்தளை
(2) அனுராதபுரம், பொலன்னறுவை, சிகிரியா மற்றும் கண்டி
(3) அனுராதபுரம், தம்புள்ளை, திருகோணமலை மற்றும் குருநாகல்
(4) பொலன்னறுவை, திருகோணமலை, குருநாகல் மற்றும் கண்டி
(5) குருநாகல், மாத்தளை, யாப்பகூவ மற்றும் சிகிரியா (……)

**40.** பூகோளமயமாக்கம் காரணமாக இலங்கை சந்திக்கும் சாதகமற்றதொரு பொருளாதாரத் தாக்கமாவது,
(1) மரபுரீதியான பண்பாடு மேற்கத்தைய பண்பாடாக உருமாற்றம் பெறல்
(2) நீர் வளங்கள் மாசுபடல்
(3) மனித உரிமைகள் மற்றும் ஆட்சி முறை என்பன அடக்குமுறைக்குட்படல்
(4) செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்தல்
(5) குடும்ப நிறுவனங்களில் மாற்றங்கள் இடம்பெறல் (……)

* *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **2**

භූගෝල විද්‍යාව I / புவியியல் I / Geography I

II කොටස / பகுதி II / PART II

22 STE I

විභාග අංකය / சுட்டெண் / Index No ..............................



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

**22 T I**

**அறிவுறுத்தல்கள் :**

- ⁕ பகுதி **II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- ⁕ பகுதி **III** இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
- ⁕ இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1 : 50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும், உலகப் புறவுருவப் படமும், வரைபுத் தாள்கள் மூன்றும் வழங்கப்படும்.

## பகுதி II

**1.** இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இறக்குவானை இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. சமவுயரக் கோடுகள் 20 மீற்றர் இடைவெளியில் காட்டப்பட்டுள்ளது. இப் படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு :
- ⁕ விடைத்தாளில் தொடர்புடைய **வினா இலக்கத்தினையும்** அதன் **உப பிரிவுகளின் இலக்கங்களையும்** தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- ⁕ **இடவிளக்கப் படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.**
- ⁕ உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப் படத்தினை இணைக்க **வேண்டாம்.**

(i) படப் பகுதியில் திரிகோணகணித நிலையத்தினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள மிகக் கூடிய உயரத்தினைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) படப் பகுதியில் இடவுயரத்தினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள மிகக் குறைந்த உயரத்தினைக் காட்டும் புள்ளியினைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(iii) நாற்பக்கல்கள் Ⓐ மற்றும் Ⓑ இனால் முறையே எடுத்துக் காட்டப்படும் **இரண்டு** வடிகால் அம்சங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iv) Ⓒ இல் இருந்து Ⓓ வரை விரிவடைந்து செல்லும் பிரதான வீதியின் தூரத்தினைக் கிலோ மீற்றர்களில் குறிப்பிடுக. (01 புள்ளி)

(v) நாற்பக்கல் Ⓔ மற்றும் Ⓕ இல் காணப்படும் **இரண்டு** பண்பாட்டு அம்சங்களை முறையே பெயரிடுக. (02 புள்ளிகள்)

(vi) படத்தில் காட்டப்பட்டுள்ள Ⓖ - Ⓗ மற்றும் Ⓙ - Ⓚ கோடுகளின் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ள **இரண்டு** பௌதிக அம்சங்களை முறையே பெயரிடுக. (02 புள்ளிகள்)

(vii) படத்தில் காட்டப்பட்டுள்ள Ⓛ இல் இருந்து Ⓜ வரை குறுக்குவெட்டு முகம் ஒன்றினை வரைந்து வரைபடத்திலிருந்து இனங்காணக்கூடிய அம்சத்தினைப் பெயரிடுக. (தரப்பட்டுள்ள வரைபுத் தாளைப் பயன்படுத்தவும்) (05 புள்ளிகள்)

(viii) படப் பகுதியில் காணப்படும் பின்வரும் இரண்டு நிலப் பயன்பாட்டு வகைகள் ஒவ்வொன்றுக்குமுரிய முனைப்பான அம்சங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(அ) தெங்குப் பயிர்ச்செய்கை (ஆ) சேனைச்செய்கை

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**2.** தரப்பட்டுள்ள உலகப் படத்தில், வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் **குறித்துப்** பெயரிடுக.

(i) உக்ரேய்ன்
(ii) லபிறடோர் நீரோட்டம்
(iii) மகரக்கோடு
(iv) கலிபோர்ணியா குடாநாடு
(v) போல்ரிக் கடல்
(vi) கங்கை நதி
(vii) சுமாத்திரா தீவு
(viii) அந்திஸ் மலைத் தொடர்
(ix) ஆபிரிக்கக் கண்டத்தில் மிகப் பெரிய நிலப் பரப்பைக் கொண்ட நாடு
(x) சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தலைமையகம் அமைந்துள்ள நகரம்

(10 புள்ளிகள்)

## பகுதி III

**3.** (i) புவியியல் தகவல் முறைமை (GIS) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) புவியியல் தகவல் முறைமையின் ஏதாவது **நான்கு** கூறுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) புவியியல் தகவல் முறைமையின் **மூன்று** பயன்பாடுகளைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) தரவுப் படைகள் **மூன்றினைப்** பயன்படுத்திப் புவியியல் தகவல் முறைமைப் படமொன்று எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்பதைப் பொருத்தமான புனையா வரைபடங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

**4.** (i) தரவு என்பதனால் கருதப்படுவது யாது? (01 புள்ளி)

(ii) வளிமண்டல மூலகங்களை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஏதாவது நான்கு கருவிகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) அவதானிப்பு மூலம் மேற்கொள்ளப்படும் **இரண்டு** தரவு சேகரிப்பு முறைகளைச் சுருக்கமாக ஆராய்க. (04 புள்ளிகள்)

(iv) அவதானிப்பின் ஊடாகத் தரவு சேகரிக்கப்படும் போது எதிர் கொள்ளப்படும் **மூன்று** பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

**5.** அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை 1 : இலங்கையில் மாவட்டங்களுக்கான பருமட்டான பிறப்பு வீதம் (CBR) (தலா 1000 குடித்தொகைக்கு) - 2021**

| மாவட்டம் | பருமட்டான பிறப்பு வீதம் |
|---|---|
| கொழும்பு | 11.4 |
| கம்பகா | 10.2 |
| களுத்துறை | 9.8 |
| கண்டி | 12.8 |
| மாத்தளை | 12.6 |
| நுவரெலியா | 13.2 |
| காலி | 13.2 |
| மாத்தறை | 10.8 |
| ஹம்பாந்தோட்டை | 15.8 |
| யாழ்ப்பாணம் | 14.0 |
| கிளிநொச்சி | 21.0 |
| மன்னார் | 19.9 |
| வவுனியா | 17.3 |

| மாவட்டம் | பருமட்டான பிறப்பு வீதம் |
|---|---|
| முல்லைத்தீவு | 11.5 |
| மட்டக்களப்பு | 15.6 |
| அம்பாறை | 17.3 |
| திருகோணமலை | 18.9 |
| குருநாகல் | 12.3 |
| புத்தளம் | 14.5 |
| அனுராதபுரம் | 13.3 |
| பொலன்நறுவை | 14.3 |
| பதுளை | 13.8 |
| மொனராகலை | 13.4 |
| இரத்தினபுரி | 13.2 |
| கேகாலை | 12.2 |
| **இலங்கை** | **12.9** |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம், இலங்கை, 2022.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

[பக். 9 ஐப் பார்க்க

(i) அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள தரவுகளை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி இடையம் ($Q_2$), கீழ் காலணை ($Q_1$), மற்றும் மேல் காலணை ($Q_3$) ஆகியவற்றினைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) உம்மால் மேலே 5(i) இல் ஒழுங்குபடுத்தப்பட்ட தரவுப் பரம்பலை எடுத்துக்காட்டுவதற்கு பிரிக்கை வரைபடமொன்றினை அமைத்து அதில் $Q_2, Q_1$ மற்றும் $Q_3$ ஆகியவற்றினை குறித்துப் பெயரிடுக. (இதற்காக வழங்கப்பட்டுள்ள வரைபுத்தாளைப் பயன்படுத்துக.) (05 புள்ளிகள்)

(iii) தரவுகளின் இடைக்காலணை வீச்சினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) உம்மால் அமைக்கப்பட்ட பிரிக்கை வரைபடத்தின் மூலம் எடுத்துக் காட்டப்படுவது போன்று, இலங்கையில் மாவட்டங்களின் அடிப்படையிலான பருமட்டான பிறப்பு வீதத்தின் பரம்பல் பாங்கில் காணப்படும் **நான்கு** முனைப்பான அம்சங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**6.** அட்டவணை 2 இல் தரப்பட்டிருக்கும் தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை 2 : இலங்கையில் மாகாண மற்றும் தேசியப் பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை மாகாண அடிப்படையில் - 2020**

| மாகாணம் | மாகாணப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை | தேசியப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மேற்கு | 35 745 | 10 934 |
| மத்திய | 29 939 | 5 128 |
| தெற்கு | 24 168 | 7 336 |
| வடக்கு | 16 767 | 1 957 |
| கிழக்கு | 20 154 | 3 851 |
| வட மேற்கு | 25 504 | 4 362 |
| வட மத்திய | 15 765 | 1 622 |
| ஊவா | 17 666 | 3 130 |
| சப்ரகமுவா | 22 248 | 3 758 |

மூலம்: இலங்கையின் வருடாந்தப் பாடசாலை தொகை மதிப்பு, 2020.

(i) அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள தரவுகளை எடுத்துக்காட்டுவதற்கு இரட்டை பார் வரைபொன்றினை வரைக. (இதற்காக வழங்கப்பட்டுள்ள வரைபுத்தாளினை பயன்படுத்துக) (08 புள்ளிகள்)

(ii) உம்மால் வரையப்பட்ட வரைபினை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் மாகாண மற்றும் தேசியப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கைப் பரம்பலில் காணப்படும் **நான்கு** அம்சங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரட்டை பார் வரைபு முறையின் **மூன்று** நன்மைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)


* * *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

22 I

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22185




SCALE 1 : 50,000

සමෝච්ච රේඛා අන්තරය මීටර 20
சமவுயரக்கோட்டு இடைவெளி 20 மீற்றர்
Contour Interval 20 metres

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II

**22 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

**1.** (i) மண் உருவாக்கத்தினை ஏற்படுத்தும் **நான்கு** பௌதிகக் காரணிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மண்ணின் பக்கப்பார்வை வெளியுருவப் படமொன்றினை வரைந்து அதிலுள்ள படைகளில் ஏதாவது **இரண்டின்** பண்புகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையில் காணப்படும் பிரதான மண் வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டினை** விவரிக்குக.

(அ) செங்கபில லட்டோசோல்ஸ்

(ஆ) செங்கபில மண்

(இ) வண்டல் மண் (06 புள்ளிகள்)

(iv) மண்ணைப் பேணிப் பாதுகாத்தல் என்பது தற்பொழுது ஏன் அத்தியாவசியமானதாக மாறியுள்ளதென்பதை **மூன்று** காரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**2.** (i) உலகின் ஏதாவது **நான்கு** பாலைவனங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பாலைவனப் பகுதிகளில் நீரினால் உருவாக்கப்படும் **மூன்று** நிலவுருவங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) பாலைவனப் பகுதிகளில் காற்றின் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் **இரண்டு** அரித்தல் நிலவுருவங்களின் உருவாக்கத்தினை வரைபடங்களினுதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) பாலைவனப் பகுதிகளில் காற்றின் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் படிதலுக்குரிய **இரண்டு** நிலவுருவங்களின் உருவாக்கத்தினை வரைபடங்களினுதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) வரட்சி என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) உலகில் இனங்காணக் கூடிய வரட்சியின் **மூன்று** வகைகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) வரட்சி இடரானது அனர்த்தமாக உருமாற்றம் பெறும் விதங்கள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் வரட்சியின் தாக்கத்தினை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

4. (i) சூழலியல் தொகுதி என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) 'இலங்கையின் அயன மழைக்காடு' தொடர்பாகப் பின்வரும் தலைப்புகளின் கீழ் சுருக்கமாக விவரிக்குக.

(அ) காலநிலை

(ஆ) தாவரம்

(இ) புவியியல் பரம்பல் (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் சூழலியல் தொகுதிகளின் அண்டிய பகுதிகளில் பிரச்சினைகள் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமையும் **மூன்று** மானிட நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் காடுகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் **மூன்று** நடவடிக்கைகளைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II - மானிடப் புவியியல்

5. 1981 தொடக்கம் 2021 வரைப்பட்ட காலத்துக்குரிய மாகாணங்களுக்கான இலங்கையின் குடித்தொகை அடர்த்தி அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 1 : இலங்கையில் மாகாணங்களின் குடித்தொகை அடர்த்தி, 1981 - 2021**

| மாகாணம் | வருடம் | | | |
|---|---|---|---|---|
| | **1981** | **2001** | **2012** | **2021** மதிப்பிடப்பட்டது |
| மேல் | 1064 | 1461 | 1588 | 1688 |
| மத்திய | 354 | 427 | 453 | 495 |
| தென் | 340 | 411 | 447 | 486 |
| சப்ரகமுவ | 298 | 363 | 388 | 420 |
| வட மேல் | 216 | 275 | 302 | 329 |
| கிழக்கு | 98 | 142 | 156 | 178 |
| ஊவா | 108 | 139 | 149 | 165 |
| வட மத்திய | 81 | 106 | 121 | 134 |
| வடக்கு | 125 | 117 | 120 | 131 |
| **இலங்கை** | **226** | **287** | **310** | **338** |

மூலம் : இலங்கையின் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் - 2022

(i) குடித்தொகை அடர்த்தி என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) 1981 - 2021 காலப் பகுதியில், இலங்கையின் குடித்தொகை அடர்த்தியில் காலரீதியாக ஏற்பட்டுள்ள **மூன்று** மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) 1981 - 2021 காலப் பகுதியில், இலங்கையில் மாகாண குடித்தொகை அடர்த்தியின் பரம்பலில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குடித்தொகை அடர்த்தியில் ஏற்பட்டுவரும் அதிகரிப்பு காரணமாக தோற்றம் பெற்றுள்ள **மூன்று** பிரச்சினைகளைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

6. (i) குடியிருப்பு என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) கிராம - நகரக் (rurban) குடியிருப்புக்களில் காணக்கூடிய ஏதாவது **மூன்று** பண்புகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) நகர மற்றும் கிராம - நகரக் குடியிருப்புக்களுக்கு இடையிலான **மூன்று** வேறுபாடுகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் கிராம - நகரக் குடியிருப்புகள் அண்டிய பகுதிகளில் இனங்காணக்கூடிய **மூன்று** போக்குகளைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

7. (i) கனிய வளம் என்பதினால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் காணப்படும் **மூன்று** பிரதான கனிய வளங்களைப் பெயரிட்டு, அவற்றின் புவியியல்ரீதியான பரம்பலைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு கனிய வளங்களின் பங்களிப்பினை **மூன்று** உதாரணங்களுடன் ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) கனிய வளங்களின் பயன்பாட்டின் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் **மூன்று** சூழலியல் பிரச்சினைகளை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

8. (i) ஐரோப்பிய ஒன்றியத்தின் (European Union) ஏதாவது **நான்கு** அங்கத்துவ நாடுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஐரோப்பிய ஒன்றியத்தின் **மூன்று** நோக்கங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) ஐரோப்பிய ஒன்றியத்தினால் எதிர்கொள்ளப்படும் **மூன்று** பிரச்சினைகளைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) ஐரோப்பிய ஒன்றியத்துடன் கொண்டிருக்கும் தொடர்பின் காரணமாக இலங்கை பெற்றுக்கொள்ளும் **இரண்டு** நன்மைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

* * *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/